மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.99/2021</u>

2025ம் ஆண்டு ஜூன் மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>26.06.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா சொத்தில் குடியிருப்பு வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. அந்த வீடு ஓட்டு வீடா தார்சு வீடா என்றால் ஓட்டு வீடு அதற்கு கதவு எண் உள்ளதா என்றால் இல்லை. கதவு எண் போடவில்லை. அந்த வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை அந்த வீட்டில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் நான் தான் குடியிருந்து வருகிறேன். நான் எனது வழக்குரையிலும் முதல் விசாரணை நிரூபன வாக்குமூலத்திலும் எங்கு குடியிருந்து வருவதாக சொல்லி உள்ளேன் என்றால் அமராவதி நகரில் குடியிருந்து வருவதாக சொல்லி உள்ளேன். அப்போது நான் சரவணா நகர் சிவன் மலையில் குடியிருந்து வரவில்லையா என்றால் இல்லை. தற்போது அந்த முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன் இன்று எந்த முகவரியில்

நான் வசித்து வருகிறேன் என்றால் சிவன்மலை சரவணா நகரில் வசித்து வருகிறேன்.

2. நான் தாவா சொத்தில்குடியிருந்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல அங்கு தான் குடியிருந்து வருகிறேன் நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்று தாவா சொத்தில் வீடு உள்ளது குறித்து காண்பித்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் நான் சொல்வது போல் வீடு எதுவும் கிடையாது என்றும் அதனால் தான் மேற்படி வீடு குறித்து நான் எந்த ஆவணங்களையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 1958 ஆம் வருடத்திய ஆவணத்தில் தாவா சொத்தில் கிணறு உள்ளதாக காட்டப்படவில்லை என்றால் காட்டை வாங்கிய பின்பு தான் அதில் கிணறு வெட்டினோம்.

3. அதில் 2 மின் இணைப்புகள் உள்ளது மின் இணைப்பு எண் என்னவென்றால் மின் இணைப்பு எண் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மின் இணைப்புகள் 2ம் யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது. பிரதிவாதிகள் குமாரசாமி மற்றும் பார்வதி ஆகியோர் இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம் பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் கிணறு வெட்டி பிரதிவாதிகள் பெயரில் மின் இணைப்பு பெற்றதாக சொல்லி உள்ளார்கள் என்றால் இல்லை.

4. அந்த மின் இணைப்புகள் என்னுடையது நான் சொல்வது போல் நான் கிணறு எதுவும் வெட்டவில்லை என்றும் அதற்கு மின்

இணைப்பு எதுவும் வாங்கவில்லை என்றும் மேற்படி கிணற்றைப் பொறுத்த மின் இணைப்புகள் நாலது தேதி வரை பிரதிவாதிகள் பெயரில் தான் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. கடந்த 30.07.2010 தேதியில் பிரதிவாதிகள் தங்கள் குடும்பத்திற்குள் ஒரு பாக பாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. மேற்படி பாகபாத்திய விடுதலை ஆவணத்தை தான் நான் வா.சா.ஆ.27 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் வா.சா.ஆ.27 ஆவணமானது தாவா சொத்தையும் சேர்த்து ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது எனக்கு பாத்தியப்பட்ட சொத்து வா.சா.ஆ.27 ஆவணம் 2010 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதற்கு பின்பு உரிய கால வரையறைக்குள் மேற்படி ஆவணம் செல்லாது என கோரி நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆவணம் ஏற்படுத்தப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.27 ஆவணம் ஏற்படுத்தப்பட்டதற்கு பிறகு மேற்படி ஆவணத்தை கொண்டு அடமானம் வைத்து பிரதிவாதிகள் வங்கியில் கடன் பெற்றுள்ளார்கள் என்றால் நாங்கள் எங்கள் சொத்தை பாகப்பிரிவினை செய்து கொள்ள வில்லங்கம் போட்டு பார்த்த போது தான் மேற்படி ஆவணம் மற்றும் அடமானம் குறித்து எங்களுக்கு தெரிய வந்தது.

6. வா.சா.ஆ.27 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட விபரம் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் எங்களுக்கு தெரியாது என்றும் தற்போது தான் தெரியவந்தது என்றும் வழக்குரையில் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில்

குடியிருக்கவும் இல்லை தாவா சொத்தை அனுபவம் செய்து வரவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வந்திருந்தால் வா.சா.ஆ.27 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதியிலேயே எனக்கு அது குறித்து தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல.12. .07.2021 தேதியில் பட்டா மாறுதல் உத்தரவை பெற்று அதை தான் வா.சா.ஆ.7 ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவத்தில் நான் இருந்து வருவதை காட்ட கிஸ்து ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

7. நான் சொல்வது போல் தாவா சொத்தை பொறுத்து எனது மற்றும் எனது முன்னோர்கள் பெயரிலான கிஸ்து ரசீதுகள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.29 மற்றும் வா.சா.ஆ.32 ஆகிய பட்டாக்கள் 3ம் பிரதிவாதி பெயரில் தான் தற்போது உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவா சொத்துக்களை ஆதி காலத்தில் இருந்து பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் அதை பொறுத்து பிரதிவாதிகள் குடும்பத்தில் ஆவணங்கள் ஏற்படுத்தியும் வங்கியில் அடமானம் வைத்தும் தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் நான் தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவித்து வரவில்லை என்றும் தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

8. அதனால் தான் நான் தாவா சொத்தில் அனுபவத்தில் இருப்பதை காட்ட நான் எந்த விதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியாக எனது தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடி என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.06.26 18:46:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்